# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 32/2024

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. ச. பாண்டி சிவகாமி, -உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அழகுத்தாய் வா.சா.-1 | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

---

முதல் விசாரணை 10-09-2025.

நான் இந்த வழக்கின் 1ம் வாதி. வாதிகள் தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படிக்க கேட்டு விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

23.10.1978 ம் தேதியிட்ட குன்னம்மாள் என்பவருக்கு ராமசாமி நாயுடு என்பவர் எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரம்(ஆவண எண். 1109/1978) SRO நகல் **வா.சா.ஆ.-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா வீட்டிற்குரிய வீட்டுவரி ரசீதுகள்(எண்ணம்-4) 1ம் வாதி கணவர் திருவேங்கடம் பெயரிலுள்ளது அசல் **வா.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா வீட்டிற்குரிய வீட்டுவரி ரசீதுகள்(எண்ணம்-6) 1ம் வாதி பெயரிலுள்ளது அசல் **வா.சா.ஆ.-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள்(எண்ணம் -10) அசல் **வா.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள்(எண்ணம் -13) அசல் **வா.சா.ஆ.-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள்(எண்ணம் -6) அசல் **வா.சா.ஆ.-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.05.2023ம் தேதியிட்ட திருவேங்கிடம் என்பவரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18.06.2023ம் தேதியிட்ட தாவா சொத்திற்குரிய வில்லங்கச் சான்றிதழ் இணைய நகல் **வா.சா.ஆ.-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

22.06.2023ம் தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் RAPP தபால் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது அலுவலக நகல் மற்றும் அசல் **வா.சா.ஆ.-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாது திருப்பி அனுப்பிய மூடியுடன் கொண்ட கவர் அசல் **வா.சா.ஆ.-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அரசு வழிகாட்டுதல் மதிப்பீடு இணையதள நகல் **வா.சா.ஆ.-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்தி வைக்கப்படுகிறது.